முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1199

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.01.2023, செவ்வாய்கிழமை

1. தர்மபலம் கொண்ட ஞானியே
   தவபலம் மிக்க தவசியே
   பெருமைமிக்க ஞானவான்களை படைக்க
   பிரணவக்குடில் படைத்த மகா யோகியே
2. யோகியே ஆறுமுக அரங்கனே
   உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் இனிதே
   மகிழவே ஞான அறிவுரை ஆசி
   மண்ணுலகில் சுபகிருது சிலை திங்களில் உரைப்பேன்
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 26 ம் நாள் 10.01.2023, செவ்வாய்கிழமை)
3. உரைக்கவே அரங்கன் பலம் உலகம் அறிய
   உண்மை நிறைந்த ஞானவான்கள் படை பெருகி
   குறைவின்றி உலகம் நல்வழி காணும்
   குவலயமே ஞானவான்கள் படைகள் பெருகி
4. பெருகியே இந்த பேருலகம்
   பாடிடுவேன் ஞானத்தலைமைகள் கொண்டு
   வருமுலகில் ஞானஆட்சியாகவும்
   வல்லமைகொண்ட ஞானிகள் ஆட்சியாகவும் மாறி
5. மாறியே அகிலம் அமைதி காணும்
   மக்களுக்கு பாதுகாப்பான வாழ்வாக மாறும்
   ஆறுதலாய் அரங்கன் வழி உலகோர் தேடி அனுகியே சன்மார்க்க விதி வழி ஞானம் பயில
   இந்த உலகினில் நல்மாற்றம் அரங்கன் வழி ஞான ஆட்சிக்காலமாக மாறுதல் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–